Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 73/2022

**2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 03-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 11 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி .லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 11 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | ராமச்சந்திரன் | வட்டம் | - | கோயம்புத்தூர் |
| த/பெ | - | ராதாகிருஷ்ணன் | சமயம் | - | |
| கிராமம் | - | கோயம்புத்தூர் | வயது | - | 55 |
| சாதி | - | | | | |

**03.01.2024**

**(1 எதிரி ஆஜர். 2-வது எதிரி ஆஜரில்லை. 2-வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கோயம்புத்தூர் திட்டமிட்ட குற்ற நுண்ணறிவு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் காடம்பாறை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 21.05.2020-ம் தேதி திரு. கே. கே. ரவி என்பவர் தபால் மூலம் அனுப்பி வைத்த புகாரைப் பெற்று மேற்படி புகாரினை கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களது சட்ட ஆலோசகரின் கருத்துரைக்கு அனுப்பியும், பின்னர் 18.06.2020-ம் தேதி மேற்படி புகார் தொடர்பாக காடம்பாறை காவல்நிலைய குற்ற எண் 12/20, சட்டப்பிரிவு 427, 454, 380 மற்றும் 120(B) இதச- வின்படி வழக்கு பதிவு செய்தும், முதல் தகவல் அறிக்கையின் நகலை உரிய நீதிமன்றத்திற்கும் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலினை காவல் ஆய்வாளர் வால்பாறை காவல் நிலையம் அவர்களிடத்தில் புலன் விசாரணைக்காக அனுப்பி வைத்தேன்.**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 10 ஆகும்.**

2. பின்னர் வழக்கு கோப்பை தொடர் விசாரணைக்காக ஆய்வாளர் மகேஸ்வரி அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. புகாரில் புகார் கொடுத்தவரின் கையொப்பம் இருந்ததா என்றால் இருந்தது. புகாரில் யார் மூலமாக

தகவல் வந்தது வழக்கின் எதிரிகள் தான் சம்பவத்தை செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் கண்டெய்னர் காட்டேஜ்-ல் பணி செய்யும் பார்த்திபன் மற்றும் சிலர் இந்த செயலை செய்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2. புகாரில் குறிப்பிட்டிருந்த பார்த்திபன் மற்றும் சிலர் இந்த செயலை செய்ததாக எப்படி யார் மூலம் தெரிந்து கொண்டதாக விசாரணை செய்தேனா என்றால் அவருடைய இடத்திற்கு போனபோது அறையின் கதவின் தாழ்பாள் உடைக்கப்பட்டிருந்தது. இது குறித்து அக்கம்பக்கம் விசாரித்தபோது கண்டெய்னர் காட்டேஜ்-ல் பணிபுரியும் பார்த்திபன் மற்றும் சிலர் இங்கு வந்து சென்றதாக தெரிவித்தார்கள் என்று கே.கே. ரவி என்னிடம் சொன்னார்.

3. அவர் சொல்லிதான் எனக்கு தெரியும். நான் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். புகாரில் சம்பவயிடம் யாருக்குச் சொந்தமானது என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை.

4. புகாருடன் அந்த இடத்திற்கான ஆவணத்தையோ, குத்தகை பத்திரத்தையோ சேர்த்து கொடுக்கவில்லை என்றால் இல்லை. திருட்டு போனதான பொருள் யாருக்குச் சொந்தமானது என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் மேற்படி இடத்தில் இருந்த பொருள் என்று சொல்லப்பட்டிருந்தது. அது கே.கே. ரவி மற்றும் முருகனுக்கு சொந்தமானவை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை.

5. சட்டக் கருத்துரை எந்த சூழ்நிலையில் எந்தமாதிரி வழக்குகளில் வாங்குவேன் என்றால் காலதாமதமாக பெறப்படும் புகார்கள். இடம், நிலம் தொடர்பான புகார்கள். குற்றமுறு சதி நடந்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. சட்டக் கருத்துரை கேட்டது சம்பந்தமாகவோ, அது சம்பந்தமான வேண்டுகோள் கடிதத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை.

6. புகாரில் திருடுபோன பொருட்கள் குறிப்பிட்டு சொல்லபட்டிருக்கிறதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. திருடு போன பொருட்களில் கலர், கம்பெனி மாடல் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். சொன்ன தேதியில் எந்த புகாரையும் கொடுக்கவில்லை என்றாலும், சட்டக் கருத்துரை பெறவில்லை என்றாலும், சொன்ன தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.